உலகத்தமிழ் : பன்னாட்டு மின் ஆய்விதழ் மலர்-2, இதழ்-5, சூலை- 2019



# வள்ளுவர் - மகாத்மா - மகாவிரதங்கள்

**முனைவர் சு. முத்துஇலக்குமி**
முதல்வர்(பணி நிறைவு) மதிப்புறு முதல்வர்,
காந்திய சிந்தனைக் கல்லூரி, மதுரை

---

**"உள்ளத்தால் பொய்யாதொழுகின் உலகத்தார்**
**உள்ளத்து எல்லாம் உளன்"** (எண். 294)

என்ற வள்ளுவரின் வாக்கிற்கான இலக்கண, இலக்கியமாக வாழ்ந்தவர் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி, காந்தி, பாபு, மகாத்மா, தேசத்தந்தை என்று பல்வேறு சொற்களால் போற்றப்பட்ட அன்றைய முப்பது கோடி மக்களில் ஒருவராக வாழ்ந்த பாரதத் தாயின் முதன்மையான மகன் ஆவார். வள்ளுவம் திட்ப நுட்பச் செறிவு மிகு, சொற்செட்டுடன் கூடிய உலகப் பொது மறையாகும். மானுட வாழ்வியல் நெறிகளை மட்டுமே எடுத்துரைத்த நூல், உரைப்போர் உள்ளக் கருத்திற்கு ஏற்ப வீச்சினை வழங்க வல்லது.

## இந்நூலின் மூன்று பெரும் பிரிவாக

1.அறத்துப்பால் 2.பொருட்பால் 3.இன்பத்துப்பால்(அ)காமத்துப்பால் என்பன உள்ளன. இவற்றில் இயல்பகுப்பாக முறையே 4, 7, 2 எனபனவும் தொகுக்கப்பெற்று உள்ளன. 133 அதிகாரங்கள், அதிகாரத்திற்குப் பத்துப் பாக்கள் இடம் பெற்றுள்ளன. இப்பத்துப்பாக்களில் ஒரு கட்டமைப்பு காணப்படுவதை உய்த்து உணரலாம்.

- முதற் குறட்பா - அதிகாரத்தின் விளக்கம் - முன்னுரை
- 2 முதல் 9 வரை உள்ள பாக்கம் - விரிவான, வினா விடைப் பாங்கில் மற்றும் தெளிவு படுத்தும் வகையில் கருத்தாக்கங்கள் விளக்கப்படுகின்றன.
- 10வது குறட்பா - அதிகாரத்தின் முடிவுரை.

என்பதே அவ்வமைப்பாகும்.

மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி, கஸ்தூரி பாய் இருவருமே 1869-இல் பிறந்தவர்கள். எனவே, 2019-ஆம் ஆண்டு அவ்விருவருக்குமே 150-ஆவது ஜெயந்தி ஆண்டாகும்.

- காந்தி அரசியல், பொருளாதாரச் சமுதாயச் சமய, அறிவியல், அறவியல் மனிதன்.
- கஸ்தூரிபா தன் தனித்துவத்தை இழக்காது குடும்ப வாழ்வில் கணவனின் கொள்கைகளைப் புரிந்து ஏற்றுக் கொண்டு போற்றிய மனைவி, நான்கு

புதல்வர்களின் தாய் மட்டுமல்ல, இந்திய மக்களின் அன்பிற்குரிய அன்னை, “பா” ஆவார்.

- வாழ்வியல் நிகழ்வுகளின் சோதனைகள் மூலம் வாழ்க்கையை வளப்படுத்திய தனித்துவமிகு வித்தியாசமான வாழ்க்கையைத் தான் மட்டுமின்றித் தன்னுடன் ஒரு குடும்பத்தைச் சத்தியம், அகிம்சை வழி நெறிப்படுத்தி உருவாக்கிக் கொண்டு இலக்கினை அடைதலில் பாதையும் முக்கியம் என்பதை எடுத்துரைத்தவர். அதற்காகத் தனிமனித ‘ஒழுக்க மிகு’ வாழ்விற்காகப் ‘பதினொரு மகா விரதங்களை’ உருவாக்கி அதைத் தன் வாழ்வில் கடைப்பிடித்து வாழ்ந்தவர் காந்தி.

- ‘தேசத் தந்தை’ என்றும் ‘காந்தி தேசம்’ என்றும் ‘மகாத்மா’ என்றும் ‘பாபு’, ‘காந்தி’ என்றும் அன்பின் அழைப்பினால் பல்வேறு பெயர்களைப் பெற்றார் காந்தி.

- இவரது பேரன் கோபால கிருஷ்ண காந்தி, மகாத்மாவின் ‘சத்தியம், ‘அகிம்சை’ என்பன இரண்டும் “High Voltage I dear” என்று இந்து நாளிதழில்(ஆங்கிலம்-31.10.2010) கூறியுள்ளார்.

- மகாகவி இரவீந்திரநாத் தாகூர் ‘மகாத்மா’ என்று காந்தியைக் குறிப்பிட்டார். ஆனால் அவருக்கு முன்பே எட்டயபுரத்து மகாகவி ‘மகாத்மா’ என்று தன் கவிதைகளில் காந்தக் கனல் காந்தியைக் கூறியதோடு, அப்போது காந்தி தோற்றுவிக்க உள்ள இயக்கத்தையும் ஆசிர்வாதம் செய்துள்ளார். (மகாகவி பாரதியார். வ.ரா) மேலும் ‘பால பாரதி’ பத்திரிகையில் தென்னாப்பிரிக்காவில் காந்தி அங்கு வாழ்ந்த இந்தியர்களுக்காக முன்னெடுத்தச் சத்தியகிரகப் போராட்டங்களையும் குறிப்பிட்டுள்ளார். மேலும், அன்றைய இரு பத்திரிகைகளும் காந்தியை ‘மகாத்மா’ என்று போற்றியுள்ளன என்ற குறிப்பையும் காணமுடிகிறது.

- காந்தி 1930-இல் எரவாட சிறையில் இருந்தார். அவ்வமயம் இந்திய மக்களுக்காக அவர்கள் ஒழுக்க மிகு வாழ்விற்காக எனப் ‘பதினொரு’ நெறிகளை ‘விரதம்’ என்ற நடைமுறை வாழ்வியலோடு இணைத்து எழுதினார். அவையாவன.

- சத்தியம், அகிம்சை - ஒரு நாணயத்தின் இரு பக்கம் போல இயங்கும் தன்மையன.

1.பிரம்மச்சரியம், 2.அஞ்சாமை,
3.கள்ளாமை (திருமாமை) 4.எத்தாலும் } ஒழுக்கச் செழுமைக்கு உரியவை

கீழ்மேல் எண்ணமை (தீண்டாமை ஒழிப்பு),
5.நாவடக்கம், நிலையாப் பொருள் சேமியாமை.

1.நித்திய உடலுழைப்பு, 2.சுதேசி, 3.சமயசமரசம்- அன்றைய காலத்தின் தேவையினால் நாட்டுக்காக உருவாக்கப்பட்டவை

மானுட வாழ்வில் நடைமுறையில் இருப்பது 'விரதம்' என்ற நடைமுறைப் பழக்கம். உடலும், உள்ளமும் ஒருமுகப்பட்டு குறிப்பாக இறைவனுக்காக மற்றும் முன்னோர்களுக்கான என ஓரிரு நாட்கள் அல்லது குறிப்பிட்டக் கால அளவில் உணவை உண்ணாது 'உபவாசம்' இருந்து சமயத்தோடு இணைந்து இருப்பது 'விரதம்' என்பதாகும். ஆனால் காந்தி இத்தகு நடைமுறை 'விரதம்' என்பதை 'மகாவிரதங்கள்' என்று பெரிய அளவில் சிந்திப்பதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும் உரியன என்பதைத் தானே சிந்தித்துச் செயல்படுத்தி மக்கட்கும் எடுத்துரைத்து குறிப்பாகத் தமது ஆசிரம வாசிகள் (சபர்மதி ஆசிரமம், வார்தா ஆசிரமம்) ஏற்றுக் கொண்டு வாணாள் முழுவதும் வாழ வேண்டும் என்று நடைமுறைப்படுத்தினார். தானும் வாழ்ந்து காட்டினார். தானும் என்பதில் இவரது மனைவியும், மகன்களும் அடக்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

சமுதாயப்பாவங்கள் '7' என்றும், நிர்மாணத் திட்டங்கள் '18' என்றும் காந்தி தன் வாணாள் முழுவதும் சிந்தனையும், செயலும் இந்திய விடுதலையில் அந்நிய ஆதிக்கமட்டுமின்றிச் சமுதாய விடுதலையும் மக்கட் பெற்றுச் 'சர்வோதய சமுதாயம்' மலர வேண்டும் என்று வாழ்ந்தார். அவரது 18-ஆம் நூற்றாண்டு காலச் சிந்தனையும், சங்கமருவிய காலத்து கி.பி. 3-ஆம் நூற்றாண்டு வள்ளுவரின் வாழ்வியல் நெறிக் கருத்துக்களோடு ஒப்புமைப்படுத்திக் காணும் வகையில் அமைந்துள்ளத் திறம் குறிப்பிடத்தக்கது. இவ் வொப்புமையின் விளக்கமே தொடர்ந்து விளக்கம் பெறுகிறது.

**வள்ளுவர் - வாய்மை** - (அதி. 30)

- வாய்மை எனப்படுவது தீமை இலாத சொலல்.
- வாய்மை வாழ்வியல் சிறப்பு.
- உலகத்தார் உள்ளத்தில் இடம் பெறலாம் - (சான்று - காந்தி)
- இன்றைய மக்களைக் கருத்தில் கொண்டு "பொய்மையும் வாய்மையும்" இடத்த என்ற அனுமதி.

**காந்தி - சத்தியம்**

- ✓ மது, மாது, மாமிசம் என்பனவற்றினின்று விலகி வாழ்வேன் எனத் தாயிடம் செய்த சத்தியம்.
- ✓ அரிச்சந்திர நாடகத்தின் தாக்கம் - உண்மை மட்டுமே பேச வேண்டும் என்று உறுதி செய்து உள்ளத்தில் பதிவு செய்த பாங்கு.

- ✓ வாழ்வின் ஒவ்வொரு அசைவிலும் காந்தி உண்மையை மேற்கொண்டுள்ளதைச் 'சத்திய சோதனை' என்று தன் நூலுக்குப் பெயரிட்டு விளக்கியதன் மூலம் உறுதியின் திறம் விளக்கம் பெறுகிறது எனலாம்.
- ✓ 'கடவுள் உண்மை' என்பதைத் தன் நாத்திக நண்பர் சார்லஸ் பிராட்லா வின் கருத்தினை ஏற்று 'உண்மை கடவுள்' என்று உண்மையை - வாய்மையைக் கடவுளாகக் கண்டார்.
- ✓ காந்தி 'சனதான இந்து' என்று தன்னைக் கூறிக் கொள்பவர் வாழ்வில் கோ.ராமச்சந்திர ராவ் என்ற 'கோரா' போன்ற நாத்திக நண்பர்கள் நெருக்கத்திற்குரியவராக விளங்கியுள்ள உண்மைத் தனித்துவமிகு தன்மையதாகும்.

**பொறையுடைமை** (அதி.16)

1. இகழ்ச்சியை ஏற்றல்
2. பொறுத்தார் பூமி ஆள்வார்

**இன்னா செய்யாமை** (அதி.32)

1. பிறருக்கு இன்னா செய்யாமை நன்று
2. அவர் நாண நன்னையம் செய்து விடல்
3. முற்பகல் செயின் பிற்பகல் விளையும்

**அகிம்சை**

- இம்சை - துன்பம், அகிம்சை - துன்பமற்றது என்பதே பொருள்.
- காந்தி பிறர் துன்பமற்று வாழ்வது மட்டுமல்ல, தான் பிறரது துன்பத்தை வலிந்து ஏற்று வாழ்தல் என்று புதியதோர் விளக்கத்தை வழங்கியது மட்டுமல்ல அந்நெறியில் வாழ்ந்தும் காட்டினார்.
- 'அகிம்சையைக்' கற்றுத் தந்தவர். 1. தந்தை - கபாகாந்தி 2. மனைவி - கஸ்தூரிபாய் என்கிறார்.
- அந்நியர் ஆதிக்கத்தைத் தனது ஆயுதமில்லா ஆயதமாம் அகிம்சையின் வழி 'கத்தியின்றி ரத்தமின்றி' வென்று எடுத்த பெருமை காந்தியின் 'அகிம்சை'யின் நெறிக்கானது ஆகும்.
- தென்னாப்பிரிக்காவில் தன் குடும்பத்தோடு கப்பலில் இருந்து இறங்கியபோது தன்னைத் தாக்கியவர்களைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பாது அவர்களை அகிம்சை வழி அவர் 'நாண நன்னையம்' என்ற நாகரிகம் காந்திஜிக்கு உரியதாகும்.
- இந்தியாவில் நிகழ்த்திய சௌரி சௌரா, மில் தொழிலாளர் போராட்டம் என ஒவ்வொன்றுமே அகிம்சை, சத்திய நெறிகளில் இயங்கியவை தாம்!.

**அவா அறுத்தல்** - (அதி. 37)

- ○ அவா - ஆசை, அறுத்தல் = நீக்குதல் என்பதே பொருள்.
- ○ பிறப்பிற்கு வித்து ஆசை.
- ○ வேண்டாமை அன்ன விழுச்செல்வம்.
- ○ அவா நீப்பின் - பேரா இயற்கை தரும் இன்பம்'

- ஆரா இயற்கை அவா நீப்பின் அந்நிலையே பேரா இயற்கை-இன்பம் தரும்-370.
- ஆசையை நீக்கினால் 'இன்பம்' என்னும் நிலையினை அடையலாம் என்பதே வள்ளுவரின் வாக்கு.

## பிரம்மச்சரியம் (புலனடக்கம்)

1. திருமண உறவு - புலன் நுகர்வு - மக்கட்பேறு
2. மக்கட்பேறு அல்லாத புலன் நுகர்வு ஏற்புடையது அல்ல.
3. இல்லறத் துறவு ஒவ்வொரு மானுட வாழ்வுக்கும் தேவை, உடல், உள்ளம் இரண்டின் கட்டுப்பாடு புடம் போட்டு உய்விக்க வல்லது என்பதைக் காந்தி தங்களுக்கு 5 ஆண்மக்களைப் பெற்ற பின்பு உணர்ந்தார். முதற் குழந்தை இறந்து விட, ஏனைய நான்கு மகன்களுடன் வாழ்ந்த இத் தம்பதியர், 1906-ஆம் ஆண்டு காந்தி, கஸ்தூரிபாயுடன் கலந்து ஆலோசித்துப் 'பிரம்மச்சரிய' விரதத்தை மேற்கொண்டார்.
4. ஆசிரம வாழ்வுக்கு இத்தகு நெறி இவர்களின் வாழ்வுக்கு வளம் சேர்த்தது என்பதைச் சத்திய சோதனை நூலின் வழி அறியலாம்.

**இனியவை கூறல்**(அதி.10) **பயனில சொல்லாமை**(அதி.20) **சொல்வன்மை**(அதி.65)

- இனிய உளவாக இன்னாத கூறல்
- மகன் எனல் மக்கட் பதடி எனல்
- சொல்லற்க சொல்லில் பயனிலாச் சொல்
- கேளாரும் வேட்ப மொழிவதாஞ் சொல்
- விரைந்து தொழில் கேட்கும் ஞாலம்.

என்று வள்ளுவர் நாவின் பயனாம் மொழிதலை இனியதாகப் பேசுதல் என்ற நடைத்திறத்தின் மூலம் வாழ்வியல் வளத்திற்கு உரிய வழியாக மட்டுமே உணர்த்தியுள்ளார்.

## நாவடக்கம்

காந்தி ஐம்புலன்களில் ஒன்றான நாவைத் தனித்துச் சிந்தித்து விதந்து விளக்கியுள்ளார். ஏனென்றால் நாவின் செயல்பாட்டில் 'மொழிதல்' மட்டுமல்ல, உடல் நலத்திற்கும் வாழ்வுக்கும் உரிய உணவை உண்பதில் சுவைத்துப் புசித்தலில் நாவிற்குப் பெரும் பங்கு உண்டு என்பதைத் தன் வாழ்வியல் நிகழ்வுகள் வழி உணர்ந்த காரணத்தால் தனித்து எடுத்துரைத்துள்ளார்.

- குறிப்பாகப் பிரம்மச்சரிய வாழ்வுக்கு, நோயுற்ற காலத்தும் உணவுக் கட்டுப்பாட்டு கட்டாயம் தேவைப்படுவதாகும்.

- கஸ்தூரிபாயின் உடல் நலிவின் போது மருத்துவர் உப்பையும், பருப்பையும் அன்னைத் தவிர்க்க வேண்டும் என்று மருத்துவர் அறிவுறுத்திய போது அன்னையின் தயக்கத்தைப் புரிந்து கொண்டு காந்திதான் இவற்றைத் தவிர்த்து உணவு உண்ண முன் வந்துள்ளார். (சத்திய சோதனை ப. 392) என்பதைப்

படிக்குங்காலத்து அவரது 'நாவடக்கம்' பிறருக்காக என்பதில் குறிப்பாக மனைவிக்காக என்பதில் எத்தகு சுயக் கட்டுப்பாட்டு உடையவராக விளங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

- காந்தி தனது எழுத்தில், பேச்சில் என்று என்றுமே வறிதாக ஒரு சொல்லைக் கூடப் பயன்படுத்தியதில்லை என்று கூறும் வகையில் வாழ்ந்துள்ளார்.

**அவை அஞ்சானம்** (அதி. 73)

- ➢ அரியர் அவையகத்து அஞ்சாதவர்.
- ➢ உளர் எனினும் இலரொடு ஒப்பர்.
- ➢ அஞ்சாமை 'அவை' க்கு உரியதாக வள்ளுவர் வகுத்து உரைத்துள்ளார்.
- ➢ அஞ்சுவது அஞ்சாமை பேதமை அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில். (அறிவுடைமை, அதி. 43)

**அஞ்சாமை**

- ❖ அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்சியும் துணிவுடன் செயல்படும் தேவை உள்ள காலத்தில் அஞ்சாது செயலாற்றிய வீறு கொண்ட திறத்தவர் காந்தி.
- ❖ "கூச்சமே எனது பாதுகாப்பு" என்று சிறு வயதில் விளங்கிய மோகன்தாஸ், இலண்டனில் கல்விக்காகப் பயணம் மேற்கொண்ட பொழுது" நன்றின்பால் உய்த்தறியும்" திறனைப் பெற்றார்.
- ❖ தென்னாப்பிரிக்காவில் மாரீட்ஸ் பர்க்கில் ரயிலில் இருந்து கீழே தள்ளிய பின்பு எழுந்த போது, எழுச்சிமிக்கவராக அஞ்சாது மக்கட்காகப் போராடுபவராகப் 'பாரிஸ்டர் காந்தி மகாத்மாவாக மலர்ந்தார்' என்று லா.சு. ரங்கராஜன் தமது நூலில் குறிப்பிடுகிறார்.
- ❖ இந்திய மக்களின் அடிமை வாழ்வினை-அச்சமிகு வாழ்வினைத் தனது பேச்சால், எழுத்தால், தானே 'முன் மாதிரியாக" (Role Model) வாழ்ந்த போக்கினால் புரிந்து ஏற்றுக்கொள்ளும் வகையினை விளக்கினார்.

**கள்ளாமை** (அதி. 29), **வெஃகாமை** (அதி. 18)

- ✓ களவு செய்யாதிருந்தால் புத்தேள் உலகம் கிடைக்கும்.
- ✓ தன் நெஞ்சைக் காத்தல் வேண்டும்.
- ✓ வெஃகுதல் - கவர்தல்.
- ✓ பிறர் பொருளைக் கவர்தல், சிற்றின்பம் கருதிச் செயல்படுதல்.
- ✓ பிறர் பொருளை விரும்பாத பொழுது வெற்றி கிடைக்கும்.

**திருடாமை**

- காந்தி பிறர் பொருளைத் திருடுதல் மட்டுமல்ல, பிறர் கருத்தைச் சொல்லைத் தனதாக்கிக் கொள்ள விழைந்து செயல்படுதலும் திருட்டு என்றார்.
- 'மனத்தால் திருட்டு' என்பது பிறரது பொருளைப் பெற மனதால் நினைத்தாலே - திருட்டு என்கிறார்.

- தேவைக்குமேல் இருப்பது திருட்டு.
- "நாளைக்கு" என்று சேமிக்க விழைந்தால், திருட்டு நம்மைத் தொற்றிக் கொள்ளும் என்கிறார் காந்தி.
- எனவே தான் பொருள் மிகுந்து பெற்றுள்ள செல்வந்தர்கள் அப்பொருளுக்குப் பாதுகாவலராக அறங்காவலராக இருக்க வேண்டுமே தவிர (Trashier) அவற்றை உரிமைக் கொண்டாடக் கூடாது என்றார். இச்சிந்தனையில் உருவானதே 'தர்மகர்த்தா கொள்கை' எனப்படும் "உடைமையின்மைக் கோட்பாடு" ஆகும். (கோட்பாடுகளில் காந்தியம்).

**நன்றியில் செல்வம்**(அதி. 101), **துறவு**(அதி. 35)

- செல்வம், செல்லும் தகைமையது.
- சகடக்கால் போல வரும் செல்வம்.
- பொருள் பெற்றவன், செலவழிக்காத தன்மையன் ஆயின் அவன் இறந்தவனுக்கு ஒப்பாவான்.
- யாதனின் யாதனின் நீக்கம் வேண்டப்படுவது.
- பற்றற்ற தன்மை - துன்பத்தினின்று விடுவிப்பு.

### நிலையாப் பொருள் சேமியாமை

காந்தி தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த பொழுது ஆயுள் காப்பீடு செய்தவர், தனது செயல் தனது கோட்பாட்டிற்கு முரணாக இருப்பதாக உணர்ந்து உடனே தவிர்த்து உள்ளார்.

1906-இல் தென்னாப்பிரிக்க வாழ் இந்திய மக்கள் காந்திக்கும் கஸ்தூரிபாவுக்கும் பொன், பொருள் கொடுத்து வழியனுப்பி வைத்தனர். காந்தி கஸ்தூரிபாயின் விருப்பத்தை அறிந்த போதும் அவருக்கு விளக்கம் கூறி அவர் ஏற்புடன் உடனே கஸ்தூரிபா 'அறக்கட்டளையை' உருவாக்கிய திண்மை மிகு வன்மையர்.

எத்தகு உடைமைப் பொருளும் இல்லாது வாணாள் முழுவதும் ஆசிரம வாழ்வினை வாழ்ந்து காட்டிய ஆன்ம ஞானி காந்தி.

### எத்தாலும் கீழ் மேல் எண்ணாமை

- அந்நியரின் ஆதிக்க அரசியலில் மக்களைப் பிறப்பினால் பிரித்தல் என்ற வித்தகத் திறத்தால் பாகுபடுத்தி வேற்றுமைப்படுத்தி ஒற்றுமையில்லாது வாழும் வகை செய்தலைத் தவிர்க்க வேண்டி, காந்தி இத்தகு சிந்தனையும் செயலும் ஒருவரை மேலோர் என்றும் மற்றொருவர் கீழோர் எனவும் எண்ணித் 'தீண்டாமை' என்னும் கொடிய நோயினால் அழிவு வருதல் கூடாது என்று உரத்த சிந்தனையுடன் உழைத்தார்.

- குறிப்பிட்ட இனத்து மக்கள் ஆலயத்திற்குச் செல்ல மறுக்கப்பட்ட போது தானும் அத்தகு ஆலயத்திற்குச் செல்ல விரும்பாது செயல்பட்டார். மேலும் மகாதேவ் தேசாயும், கஸ்தூரிபாயும் 'பூரி' நகரிலுள்ள

ஆலயத்திற்குச் சென்ற பொது கடுமையாக அவர்களைக் கோபித்து உள்ளார். தன்னுடைய வருத்தத்தை வெளிப்படுத்தி உள்ளார்.

**பெருமை** (அதி - 98)

- பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்.
- பெருமை, சிறுமை - செய்யும் செயலால் மட்டுமே பெறப்படுவது.

இட்டார் பெரியோர்
இடாதார் சிறியோர் } ஔவையின் வாக்கு

- நித்திய உடல் உழைப்பு — என்பன காந்தியால் காலத்தின் தேவை கருதி நாட்டின் நலனுக்காக உருவாக்கப்பட்டமை
- சுதேசி
- சமய சமரசம்

**முடிவுகளாக**

- வள்ளுவம் - உலகப் பொதுமறை
- காந்தி - உலக ஆளுமை
- திருக்குறளைக் காந்தி லியோ டால்ஸ்டாய் மூலம் அறிந்த பின்பு, திருக்குறளைத் தாமே கற்க விரும்பினார். அதற்காகத் தமிழ் மொழியைக் கற்றுக் கொள்ள முயற்சி செய்தார் என்னும் குறிப்பு கவனிக்கத்தக்கது.
- கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் படைப்பு வள்ளுவம்.
- கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் புதிய விடியலின் புதுமைக் படைப்பு மோகன்தாஸ் கரம் சந்த்.
- அன்று வள்ளுவம்..... இன்று காந்தி..... நாளை.....?

காலந்தோறும் மானுட உயிர்கள் வாழ்ந்தும் மறைந்தும் போகின்றன. வள்ளுவர் வாக்கின்படி வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து ‘உலகத்தார் உள்ளத்து எல்லாம் உளனாக’ அன்றும் இன்றும் என்றும் வாழும் வளமிக மனிதர் காந்தி என்னும் காந்தக் கனல் என்றால் ஏற்புடையது.

((((((((()))))))))